

புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று உண்ணாவிரதம் இருந்தபோது எடுத்த படம்.

76 சாதிகளின் உரிமையை பறிக்கும் உள்இடஒதுக்கீட்டை ரத்து செய்யக்கோரி

# புதிய தமிழகம் கட்சி சார்பில் உண்ணாவிரதம்

## டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்றது

சென்னை, டிச.7– 76 சாதிகளின் உரிமையை பறிக்கும் உள்இடஒதுக்கீட்டை ரத்து செய்யக்கோரி புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் உண்ணாவிரதம் நடைபெற்றது.

### உண்ணாவிரதம்

புதிய தமிழகம் கட்சி சார்பில் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னை கோயம்பேட்டில் நேற்று உண்ணாவிரதம் இருந்தனர். இந்த போராட்டத்திற்கு புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி தலைமை தாங்கினார். புதிய தமிழகம் நிர்வாகிகள் ராமசாமி எம்.எல்.ஏ., பத்மநாபன், பிரசாத், கண்ணதாசன், அய்யப்பன் உள்பட ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

டாக்டர் கிருஷ்ணசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

பரமக்குடி துப்பாக்கிசூட்டில் பலியான குடும்பங்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்க வேண்டும். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 19 சதவீத இடஒதுக்கீடு மத்திய அரசின் அரசியல் சாசனத்தின்படி வழங்கப்பட்டது. இதில் எந்த மாற்றம் கொண்டுவரவேண்டும் என்றாலும் மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டும்.

### அடுத்தகட்ட போராட்டம்

ஆனால் கடந்த அரசு மத்திய அரசின் அனுமதியை பெறாமலேயே உள்ஒதுக்கீட்டை செய்துவிட்டது. அதுவும் குறிப்பாக 76 சாதிகள் உள் அடங்கியதில், ஒரு சாதிக்கு மட்டுமே முன்னுரிமை வழங்கும் உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டதின் காரணமாக, 76 சமூகத்தினர் பாதிக்கப்படுகிறார்கள். எனவே 76 சாதிகளின் உரிமையை பறிக்கும் உள் இடஒதுக்கீட்டை ரத்துசெய்யவேண்டும். தியாகி இம்மானுவேல் சேகரன் நினைவுநாள், பிறந்த நாளை அரசு விழாவாக அறிவிக்கவேண்டும். ஆதி திராவிட நலத்துறைக்கு பட்டியல் துறை என மாற்றம் செய்ய வேண்டும் என்பது உள்பட 6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம் நடைபெறுகிறது. அடுத்த கட்ட போராட்டம் குறித்து வருகிற 9–ந் தேதி புதிய தமிழகம் மாநில பொதுக்குழு கூடி முடிவு செய்யும்.

### பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்

பால் விலை உயர்வு, பஸ் கட்டண உயர்வு, மின்சார வெட்டு ஆகியவற்றால் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் இரு மாநிலங்களுக்கிடையே கசப்பான நிலை ஏற்பட்டுள்ளது. இவற்றை கண்டிக்கும் வகையில் போராட்டம் நடத்துவது குறித்தும் 9–ந் தேதி முடிவு செய்யப்படும்.

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் மாநில அரசுகள் சுமுகமான தீர்வு காண்பதற்காக பேச்சுவார்த்தை நடத்தவேண்டும். தமிழக அரசு எக்காரணத்தை கொண்டும் பேச்சுவார்த்தையைபுறக்கணிக்க கூடாது.

இவ்வாறு டாக்டர் கிருஷ்ணசாமி கூறினார்.

# அருந்ததியர்களுக்கான உள் இட ஒதுக்கீட்டை எதிர்ப்பதா?

# கிருஷ்ணசாமிக்கு ஆதி தமிழர் பேரவை கண்டனம்

நெல்லை, நவ. 23–

ஆதி தமிழர் பேரவை நிறுவனத்தலைவர் அதியமான் நெல்லையில் இன்று நிருபர்களிடம் கூறியதாவது:– அருந்ததியர்களுக்கு தற்போது 3 சதவீத இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. இதை உயர்த்தி தருவதாக தமிழக முதல்வர் தேர்தல் அறிக்கையில் கூறியுள்ளார். எனவே இட ஒதுக்கீட்டை 6 சதவீதமாக உயர்த்தி தர வேண்டும். இதைவலியுறுத்தி வருகிற டிசம்பர் மாதம் 2–ந்தேதி அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் தொடர் முழக்க போராட்டம் நடைபெறும்.

இந்த உள் இட ஒதுக்கீட்டினை ரத்து செய்ய வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சி தலைவர் கிருஷ்ணசாமி தொடர்ந்து குரல்கொடுத்துவருவது கண்டனத்துக்குரியது. மற்றொரு சமுதாயத்திற்கு வழங்கக்கூடாது என்று சொல்ல அவருக்கு உரிமை கிடையாது. எனவே இனிமேலும் தொடர்ந்து உள் ஒதுக்கீட்டை எதிர்த்தால்வரக்கூடியசட்டம்–ஒழுங்கு பிரச்சினைக்கு அவரே முழு பொறுப்பாவார். நெல்லையில் ஒண்டிவீரன் மணிமண்டபம் கட்டப்பட்டு வருகிறது. அதனை விரைந்து முடிக்க வேண்டும். மணி மண்டபத்தில் ஒண்டிவீரன் குதிரையில் இருப்பது போன்று சிலை அமைக்க வேண்டும். கூடங்குளம் அணுமின் நிலையம் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே அந்த திட்டத்தை நிறுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். அப்போது பொதுச்செயலாளர் நாகராஜன், தலைமை நிலைய செயலாளர் தமிழ்வேந்தன், மாவட்ட அமைப்பாளர் கதிரவன், மாநகர அமைப்பாளர் வேலாயுதம், நிர்வாகிகள் கலை கண்ணன், பரத்குமார், முத்துவீரன் உள்பட பலர் உடனிருந்தனர்.